# காவடிச்சிந்தில் வண்ணத்தின் புதுமை

***முனைவர். சே. பார்த்தசாரதி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
(தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறையின் கீழமைந்தது)
விளாத்திகுளம், தூத்துக்குடி மாவட்டம்
https://doi.org/10.5281/zenodo.15323807

***ஆய்வுச் சுருக்கம்***

*கிமு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தொல்காப்பியம் தமிழில் கிடைத்த முதல் இலக்கண நூலாகும். இந்நூலைத் தொல்காப்பியர் இயற்றியுள்ளார். இவர் மூன்று அதிகாரங்களாகப் பிரித்து ஒவ்வொரு அதிகாரத்திற்குமென ஒன்பது இயல்களை வகுத்துள்ளார். அதிலும் குறிப்பாக, பொருளதிகாரம் மனித வாழ்வியலைப் பற்றியது. வாழ்வியல் கூறுகள் அனைத்தையும் உட்புகுத்திச் செதுக்கியுள்ளார். தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் செய்யுளியலில் ஓசை அமைப்பை இருபது வண்ணங்கள் வழியாக வெளிப்படுத்தித் தமிழுக்கு மேலும் அழகூட்டியுள்ளார். இருபது வண்ணங்களைக் கொண்டு சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்தை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் கருதுகோளாகும்.*

## முன்னுரை

*சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரால் இயற்றப்பட்டது தான் காவடிச்சிந்து. இந்நூல் ஒரு சிற்றிலக்கிய வகையைச் சார்ந்ததாகக் கூறப்படுகிறது. மேலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பட்டது என்றாலும் கூட, தொல்காப்பியத்தின் பொருளதிகாரக் கூறுகள் ஏராளமாக இந்நூலில் காணக் கிடைக்கின்றன. தொல்காப்பியத்தின் பொருளதிகாரக் கூறுகளில் செய்யுளியல் பகுதியில் இருபது வகையான வண்ணங்களைப் பற்றிப் பேசுகிறார். அவ்வண்ணங்களைக் கொண்டு காவடிச்சிந்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகக் அமைகிறது.*

## வண்ணம்

*வண்ணம் என்பது ஓசை அமைப்பை கொண்டதாகும். அவ்வண்ணம் இருபது வகையான வண்ணங்களைக் கொண்டதாகும். அவைதாம்,*

***பா வண்ணம் தா வண்ணம்***
***வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்***
***இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்***
***நெடுஞ்சீர் வண்ணம் குறிஞ்சீர் வண்ணம்***
***சித்திர வண்ணம் நலிபு வண்ணம்***
***அகப்பட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்***
***ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்***
***எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்***
***தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்***
***உருட்டு வண்ணம் முடுகு வண்ணம் என்று***
***ஆங்ஙனம் அறிய அறிந்திசி னோரே।***
***(தொல். பொருள். செய்யுள். ப.398)***

*என்று வண்ணங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இவ்வண்ணங்கள் காவடிச்சிந்தின் புதுமைக்கு வழி வகுக்கின்றன. மேலும், வண்ணங்களைப் பற்றி தமிழண்ணல் குறிப்பிடும் செய்தியினைக் காண்போம்.*

*வண்ணம் என்பது சந்த வேறுபாடு என்பர் பேராசிரியர். தொல்காப்பியர் 20 வண்ணங்களைக் குறிப்பிடுகிறார். விருத்தங்களில் கழிநெடிலாசிரியர் சங்க விருத்தங்கள் என்பன ஒருவகை. நாட்டுப்புறப் பாடல்கள், ஆடலோடு கூடியன; பல நல்ல ஓசைச் சந்தங்களை உடையவை. அருணகிரிநாதரின் திருப்புகழ் பல நூறு சந்த வேறுபாடுகளை உடையது. ‘‘தன்னதான*

*தனதான்' என்றெல்லாம் சந்த இசை வாய்ப்பாடு அமைதலைப் பாடும். இதற்கு, வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள் தனி இலக்கணம் வகுத்தார். காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து போலும் சிந்துப் பாடல்களுக்கும் இச்சந்த வண்ணம் பொருந்தும், இங்ஙனம் பிற்காலத்தில் பெருவளர்ச்சி கண்ட வண்ணப் பாடல் வகைக்குத் தொல்காப்பியர் முதன்முதலாக இலக்கணம் கூறி, அதன் அடிப்படைகளைக் கோட்பாட்டுப் பார்வையில் சுருக்கமாகத் தருகிறார்[2] இச்செய்தியினைத் தமிழண்ணல் "தொல்காப்பியர்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். (தமிழண்ணல் ப.105)*

### தா வண்ணம்

*தா வண்ணம் என்பது ஓரடி ஓரடிவிட்டு எதுகை இடம் பெறுவதைக் குறிப்பிடுகிறது.. அதனை,*

***"தாஅ வண்ணம்***
***இடையிட்டு வந்த எதுகைத் தாகும்"[3]***
***(தொல்.பொருள். செய்யுள். ப.399)***

*இத்தொல்காப்பிய நூற்பா வழி அறிய முடிகிறது. காவடிச்சிந்தில் இவ்வண்ணம் செழிப்புற்றுக் கிடப்பதைக் காணலாம். இதனை,*

***"வல்லவுணர் வழியாதும் விட்டு - வெருள***
***வன் சமர் செய் கந்தனிடம் வழியடி மை பட்டு***
***நல்லவுணர் வழியாது மட்டு - மிஞ்சு***
***ஞான பரமானந்த மோன மடைவாமே"[4]***
***(இராமசாமி.ச,ப.56)***

*இதில் வல்ல, நல்ல என்ற சொல் ஓரடி விட்டு வந்த எதுகையாகும்.*

### வல்லிசை வண்ணம்

*வல்லெழுத்து மிகுதியாக வருவதை வல்லிசை வண்ணம் என்று குறிப்பிடுகிறார். இவ்வகை வண்ணம் காவடிச்சிந்தில் காணக் கிடைக்கின்றன. அதனை,*

***"கட்டுகதிர் பட்டுமணி வம்பு - கீழி***
***பட்டு வழிவிட்டிடஎ லும்பு - கின்ற***
***கட்டழகாம் வட்ட முலைசெம்பு"[5]***
***(இராமசாமி.ச, ப.187)***

*எனும் வரிகளின் மூலம் காண முடிகிறது.*

### மெல்லிசை வண்ணம்

*மெய் எழுத்துக்களை மிகுதியாகக் கொண்டு வருவது மெல்லிசை வண்ணமாகும். இவ்வண்ணமும் காவடிச்சிந்தில் செழிப்புற்றுத் திகழ்கின்றன. அதனை,*

***குஞ்சர அணங்கு ஆவல் வீடா - வண்ணம்***
***கொஞ்சி மருவும் சரச ரஞ்சித விசேடா***
***பைஞ்சர வணங்காவல்***
***வீடா6 இராமசாமி.ச, ப.54)***

*இப்பாடல் வழி அறிய முடிகிறது.*

### இயைபு வண்ணம்

*இயைபு வண்ணம் என்பது இடையின எழுத்து மிகுந்து வருவதைக் குறிக்கிறது. காவடிச்சிந்தில் இயைபு வண்ணமும் சில பாடல்களில் காணப்படுவதைக் காணலாம். அதனை,*

***வெள்ளித்திரையின் மேலே***
***துள்ளித் திரியும் சுறா மீனமே![7]***
***(இராமசாமி.ச, ப.226)***

*இப்பாடல் வழி அறிய முடிகிறது.*

### நெடுஞ்சீர் வண்ணம்

*செய்யுட்களில் நெட்டெழுத்து மிகுந்து வருவதை நெடுஞ்சீர் வண்ணம் என்று உரைக்கிறார். நெடுஞ்சீர வண்ணம் காவடிச்சிந்தில்*

***வீதிதொறும் ஆதிமறை வேதம் - சிவ***
***வேதியர்கள் ஓதுசாம கீதம்[8]***
***(இராமசாமி.ச, ப.112)***

*எனும் வரிகளில் மூலம் அறிய முடிகிறது.*

### குறுஞ்சீர் வண்ணம்

*குற்றெழுத்து மிகுந்து வருவதை குறிஞ்சிர் வண்ணம் என்று கூறுகிறார். அதனை, திருவுற்றிலகு கங்க வரையிற் புகழ் மிகுந்து (இராமசாமி.ச, ப.38) இன்னும் காவடிச்சிந்தின் மூலம் அறிய முடிகிறது.*

### சித்திர வண்ணம்

*நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் சார்ந்து வருவதை சித்திர வண்ணம் என்பதாகக் குறிப்பிடுகிறார்.*

*வன்னத்தாமரையைக் கண்டு - வாயில்*
*மதுரராகம் பாடிக் கொண்டு*[10]

*(இராமசாமி.ச, ப.151)*

இப்பாடல் வரியில் குறிலும் நெடிலும் இணைந்து வந்துள்ளன.

**ஒழுகு வண்ணம்**

ஓசையால் ஒழுகி கிடப்பதை ஒழுகு வண்ணம் என்று கூறுகிறார் இவ்வகை வண்ணம் காவடிச்சிந்தில் முழுமையாகக் காணக்கிடைக்கிறது ஏனென்றால் காவடிசிந்து பாடல்கள் அனைத்தும் ஓசை நயங்களால் ஒழுகிச் சிறப்புற்று விளங்குகிறது.

**ஏந்தல் வண்ணம்**

சொல்லிய சொல்லினானே சொல்லப் பட்டு சிறக்க வருவதை ஏந்தல் வண்ணம் என்கிறார். அண்ணாமலையாரின் காவடிச் சிந்திலும் இவ்வண்ணம் ஆங்காங்கே சில பாடல்களில் காணப்படுவதைக் காண முடிகிறது. அதனை,

*......................................................*
*கோள்கள்*
*சென்று சென்று நின்று நின்று மீளுமே11*

*(இராமசாமி.ச, ப.143)*

என்ற காவடிச்சிந்து வரிகள் உறுதி செய்கிறது. பின்னாளில் இதுவே, இரட்டைத் தொடையாக உருமாறுகிறது.

**உருட்டு வண்ணம்**

உருட்டு வண்ணமாவது தடையற உருளும் உருளையைப் போன்றது. குறில் எழுத்துக்கள் பெருகிவரும். காவடிச்சிந்தில் உருட்டு வண்ணம் ஏராளமாகக் காணப்படுவதைக் காணமுடிகிறது. இதற்குச் சான்றாக, வல்லிசை வண்ணத்திற்கு அமைந்துள்ள பாடலையே கூற முடியும்.

**முடுகு வண்ணம்**

முடுகு வண்ணம் என்பது அடி அளவு பெருகியும் உருட்டு வண்ணத்தை ஒத்து செல்வதாகவும் வருமன குறிப்பிடுகிறார். காவடிச்சிந்தில் அண்ணாமலையார் இவ்வண்ணத்தை அனைத்து பாடல்களிலுமே பயன்படுத்தி இருக்கிறார்.

*தேசு கொண்ட பாரதந்த வீரதும்பி ராசி அண்டர்*
*தேவதாருவைக் கரத்தால் பிடிக்குமே - சுற்றும்*
*மேவிய கிளையை வளைத்து ஒடிக்குமே - ஒளிர்*
*சேய சந்திரனோடு ரஞ்சுபலா மரங்களிலே நெருங்கிய*
*தீங்கினி மதுரசத்தை வடிக்குமே - மந்தி*
*பாங்கில் நின்றதனை அள்ளிக் குடிக்குமே*[12]

*(இராமசாமி.ச, ப.139)*

மேலும், காவடிச்சிந்து பிற்காலத்தில் முடுகு வண்ணத்தை மடக்கு என்று குறிப்பிடுகிறது முன்னோர்களின் வழி இன்றும் நவீன காலத்தினர் வழி நின்றும் மாற்றத்தை உள்வாங்கிக் கொண்டு காவடிச்சிந்தை அண்ணாமலையார் படைத்திருக்கிறார்.

*வள்ளிக் கிசைந்த முருகேசன் - அண்ணா*
*மலைக் கவிராசன் மகிழ் நேசன் - என்றும்*
*வாழும் கழுகுமலை வாவி வளம்*
*சொல்வேன் மாதே*
*கேள்இப் போதே*[13] *(இராமசாமி.ச, ப.147)*

இக்காவடிச்சிந்தியின் இறுதி இரு அடிகளில் இரு சீர்கள் மடக்கி வருவதனைக் காண முடிகிறது.

**முடிவுரை**

தொல்காப்பியர் குறிப்பிடும் இருபது வண்ணங்களில் அண்ணாமலையார் பதினொரு வண்ணங்களைப் பயன்படுத்தியுள்ளார். தா வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சிர் வண்ணம், சித்திர வண்ணம், ஒழுகு வண்ணம், ஏந்தல் வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என்கிற பதினொரு வண்ணங்களால் காவடிச்சிந்து மின்னி ஒளிர்கிறது.

**பார்வை நூல்கள்**

1. கு. வெ பாலசுப்பிரமணியன், தொல்காப்பியம் மூலமும் உரையும் (எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை. மு.ப 2019.
2. இராமசாமி. ச, சிந்துகவி பேரரசு அண்ணாமலை கவிராசன் இயற்றிய காவடிச்சிந்து, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம், மு.ப 2010.